கோசாலை சமத்துவ மேம்பாட்டு பணி துவக்கம்

குருவாயூர் தேவஸ்தானத்தின் கோசாலை சமத்துவ மேம்பாட்டுப்பணிகளை அறநிலைத்துறை அமைச்சர் முரளிதரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

பாலக்காடு, அக். 7: குருவாயூர் கிருஷ்ணர் கோயில் தேவஸ்தானத்தின் கோசாலை சமத்துவ மேம்பாட்டுப்பணிகளை அறநிலைத்துறை அமைச்சர் முரளிதரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

குருவாயூர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான கோசாலை மலப்புரம் மாவட்டம் வெங்காட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த கோசாலையின் சமத்துவமேம்பாட்டுப்பணிகளுக்கு மாநில அரசும், தேவஸ்தானமும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. 70 கோடி ரூபாய் செலவீட்டில் கோசாலையின் சமத்துவத் திட்டப்பணிகள் நடைபெறவுள்ளது. தேவஸ்தானத்தின் முன்னிலையில் கால்நடை மருத்துவக்கல்லூரி அமைப்பது குறித்து அடுத்த பட்ஜெட்டில் முடிவெடுக்கப்படவுள்ளது என அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தேவஸ்தான சேர்மன் ஏ.வி.கோபிநாத் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., மஞ்ஞளாம்குழி அலி, தேவஸ்தான வருவாய்த்துறை செயலாளர் ராஜா மாணிக்கம், தேவஸ்தான நிர்வாக உறுப்பினர்களான ஷினிஜா, நிர்வாகி ஹரிகோபால், டாக்டர். ராஜீவ் உட்பட உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

பாலக்காடு-காசர்கோடு இடையே புதிய பேருந்து சேவை

பாலக்காட்டிலிருந்து காசர்கோட்டிற்கு புதிய அரசு விரைவு பேருந்து சேவையை எம்.எல்.ஏ., ரமேஷ் பிஷாரடி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

பாலக்காடு, அக். 7: பாலக்காடு மத்தியப்பேருந்துநிலையத்திலிருந்து காசர்கோட்டிற்கு கேரள மாநில அரசுப் போக்குவரத்துக்கழகத்தின் புதிய அரசு பஸ் சேவை நேற்று முதல் தொடங்கப்பட்டது. பயணிகளின் நீண்டநாள் கோரிக்கையை பரிசீலனை செய்யப்பட்ட நிலையில் புதிய விரைவு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு மாவட்டத்தை சேர்த்த மக்கள் பயனடைவர் என எம்.எல்.ஏ., ரமேஷ்பிஷாரடி தொடக்க விழாவில் தெரிவித்தார்.

பாலக்காடு மத்தியப்பேருந்து நிலையத்திலிருந்து இரவு 7 மணிக்கு புறப்படக்கூடிய அரசு பஸ் மறுநாள் காலை 3.40 மணிக்கு காசர்கோடு சென்றடையும் என அவர் அறிவித்தார்.

இலவச கண் சிகிச்சை முகாம்

ஊட்டி எமரால்டு, நேருகண்டி பகுதியில் இலவச கண் பரிசோதனை முகாம் நடந்தது. இதனை ஊட்டி நகர திமுக., செயலாளர் ஜார்ஜ் துவக்கி வைத்தார்.

ஊட்டி, அக்.7: ஊட்டி அருகேயுள்ள எமரால்டு, நேருகண்டி பகுதியில் சர்வ ஆசியா பழங்குடியினர் அறக்கட்டளை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது. சின்னையா தலைமை வகித்தார். ஊட்டி நகர திமுக., செயலாளர் மற்றும் திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

இம்முகாமில் ஊட்டியில் உள்ள தனியார் கண் மருத்துவமனையை சேர்ந்த மருத்துவ குழுவினர் பங்கேற்று முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினர். மேலும் சிலர் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். இதில் எமரால்டு, நேருகண்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மஞ்சுகுமார், கிடியன், ராஜாமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டி காய்கறிகள் விலை நிலவரம்

கேரட்	ரூ.15-35	முள்ளங்கி ரூ.	15-25
பீட்ரூட்	ரூ.35-70	சௌசௌ ரூ.	15-30
முட்டைகோஸ்	ரூ.4-10	டர்னீப் ரூ.	20-40
பீன்ஸ்	ரூ.50-80	நூல்கோல் ரூ.	20-30

நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் உருளைக்கிழங்கு விலை நிலவரம்

ராசி உருளைக்கிழங்கு
குறைந்தபட்சம் ரூ.1350 | அதிகபட்சம் ரூ.2510

பொடி உருளைக்கிழங்கு
குறைந்தபட்சம் ரூ.370 | அதிகபட்சம் ரூ.870

மசினகுடி ஸ்ரீமசினி அம்மன் கோயில் தேர்த் திருவிழா

18ம் தேதி நடக்கிறது

ஊட்டி, அக்.7: ஊட்டி அருகே மசினகுடி ஸ்ரீமசினி அம்மன் கோயிலில் தசரா உற்சவ விழாவை முன்னிட்டு வரும் 18ஆம் தேதி தேர் திருவிழா நடக்கிறது.

நீலகிரி மாவட்டம், ஊட்டி அருகேயுள்ள மசினகுடி பகுதியில் ஸ்ரீ மசினி அம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டுதோறும் தசரா உற்சவ விழா 11 நாட்கள் வெகுவிமர்சையாக நடைபெறும். நடப்பு ஆண்டிக்கான தசரா விழா வரும் 10ம் தேதி காலை 7.30 மணியளவில் கொடியேற்றத்துடன் துவங்குகிறது.

அன்றைய தினம் மாயார் கிராமத்தில் இருந்து ஸ்ரீசிக்கம்மனை அழைத்து வந்து கொடியேற்றுதல் நிகழ்ச்சி நடைபெறும். 11ம் தேதி துவங்கி 17ம் தேதி வரை நாள்தோறும் ஸ்ரீமசினி அம்மன் தங்கைகளாக வணங்கப்படும் ஸ்ரீசிக்கம்மன், தொட்டம்மன், தண்டு மாரியம்மன் மற்றும் இதர தங்கைகளுக்கும் தினசரி சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளது. மேலும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை ஆன்மீகம் சார்ந்த சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறும். 18ம் தேதியன்று காலை 8.30 மணியளவில் தொக்கநள்ளி ஸ்ரீ மாதேஸ்வரன் கோயிலில் இருந்து கத்தி எடுத்து வருதல் நிகழ்ச்சி நடக்கிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இரவு 7 மணிக்கு மேல் ஸ்ரீ மசினி அம்மன் மசினகுடி கிராமத்தில் தசரா தேரில் பவனி ஊர்வலமும் மற்றும் அம்பு எய்தல் நிகழ்ச்சியும் நடைபெறும். தேர் ஊர்வலத்தை கூடலூர் டிஎஸ்பி., கோபாலகிருஷ்ணன், மசினகுடி இன்ஸ்பெக்டர் முரளிதரன் ஆகியோர் துவக்கி வைக்க உள்ளனர். 19ம் தேதி அன்னதானம், பிரசாத விநியோகம், முளைப்பாரி எடுத்து வருதல் மற்றும் மாவிளக்கு பூஜைகளும் நடக்கிறது.

நிறைவாக 20ம் தேதி ஸ்ரீ சிக்கம்மன் சிறப்பு பூஜைகளுடன் வழி அனுப்பி வைத்தல் நிகழ்வுடன் விழா நிறைவடைய உள்ளது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

பணி நிரந்தரம் செய்யக் கோரி

ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் வேலை நிறுத்த போராட்டம்

ஊட்டி, அக்.7: அனைத்து ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய கோரி ஊட்டியில் நகராட்சி ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து ஒப்பந்தம் மற்றும் அவுட்சோசிங் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை அமுல்படுத்த வேண்டும். காலை உணவுக்கு பதிலாக அனைத்து பணியாளர்களுக்கும் உணவுப்படியாக ரூ.100 வழங்க வேண்டும். தீபாவளி போனசாக அடிப்படை ஊதியத்தில் 8.33 சதவீதம் வழங்க வேண்டும்.

தூய்மை பணி, வடிகால் பணி, குடிநீர் வழங்குதல் பிரிவுகளில் உள்ள காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து சிஐடியு., நகராட்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் சங்கம் சார்பில் நேற்று மாநிலம் தழுவிய வேலை நிறுத்த போராட்டம் நடந்தது.

இதன் தொடர்ச்சியாக ஊட்டி நகராட்சி ஒப்பந்த ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஊட்டி நகராட்சி அலுவலகம் முன்பு கூடி கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்பாட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் நவீன் சந்திரன் தலைமை வகித்தார். சிஐடியு மாவட்டத்துணை தலைவர் சங்கரலிங்கம் கோரிக்கைகளை வலியுறுத்தி விளக்க உரையாற்றினார். வடிகால் பணியாளர் சுரேஷ், தூய்மை பணி சிலம்பரசன், குடிநீர் பிரிவு அபிஷேக் ஆகியோர் ஒப்பந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கும் அரசை கண்டித்து கண்டன உரையாற்றினார். விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட பொருளாளர் ராஜரத்தினம் வாழ்த்துரை வழங்கினார். இதில் ஏராளமான தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

இறுதியாக தூய்மை பணியாளர் சரவணன் நன்றி கூறினார். ஒப்பந்த ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்க்காவிட்டால் வேலைநிறுத்த போராட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் வேலைநிறுத்த போராட்டம் காரணமாக ஊட்டி நகரில் தூய்மை பணிகள் பாதிக்கப்பட்டது.

ஆலத்தூரில் உயர்ரக நெல் விதை கிடங்கு திறப்பு

பாலக்காடு, அக்.7: பாலக்காடு மாவட்டம் ஆலத்தூரில் ஹைடெக் நெல்விதை கிடங்கு திறப்பு விழா நேற்று நடந்தது. மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராஜன் தலைமை தாங்கினார். இதில், கேரள வேளாண் துறை அமைச்சர் வக்கீல் சித்திக் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

பாலக்காடு மாவட்டம் உட்பட 7 மாவட்டங்களில் நவீன நெல்வித்துகளின் உற்பத்தி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பாலக்காடு மாவட்ட பஞ்சாயத்தின் கீழில் 5 விதைகள் உற்பத்தி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்விடங்களில் ஆண்டுதோறும் 75 டன் நெல் வித்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் மா, தென்னை, வாழை, பலா, பாக்கு ஆகிய நாற்று விதைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால், 45 லட்சம் ரூபாய் வருவாய் வருகின்றது.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநில வேளாண் பொறியாளர் ஜெயராஜன், உதவி இயக்குநர் ரஜனி முரளிதரன், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் ஷிபி கிருஷ்ணா, ஆலத்தூர் பிளாக் பஞ்சாயத்து தலைவர் கண்ணன், கிராமப்பஞ்சாயத்து தலைவர்களான ஹரிதா சுபாஷ், கலாதரன், விஜயகுமாரி, கிரிஜா ராஜன், பாலக்காடு மாவட்ட முதன்மை வேளாண் அதிகாரி அறுமுகப்பிரசாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டியில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம்

ஊட்டி, அக்.7: ஊட்டியில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமை வகித்தார். இதில் சாலை, குடிநீர் வசதி, வீட்டுமனை பட்டா, உதவித்தொகை உள்ளிட்ட என பொதுமக்கள் மற்றும் மாற்று திறனாளிகளிடம் இருந்து 144 மனுக்களை கலெக்டர் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரண நிதி திட்டத்தின் கீழ் குன்னூர் பகுதியில் சாலை விபத்தில் உயிரிழந்த 2 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ.1 லட்சம் நிதி உதவி பெறுவதற்கான ஆணை, கொடுங்காயம் அடைந்த 2 நபர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் மற்றும் சிறு காயம் அடைந்த 2 நபர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி பெறுவதற்கான ஆணை ஆகியவற்றை கலெக்டர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, சார் ஆட்சியர் காஞ்சன் சௌத்ரி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் தீபசித்ரா, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குன்னூரில்

புதர்மண்டி கிடக்கும் கழிப்பறையை அகற்றி புதிய கட்டிடம் கட்ட மக்கள் கோரிக்கை

ஐயப்பன் கோவில் அருகில் பயன்பாட்டின்றி புதர் மண்டி கிடக்கும் கழிப்பறை.

குன்னூர், அக். 7: குன்னூரில் பயன்பாடின்றி புதர்மண்டிக் கிடக்கும் நகராட்சி கழிப்பறையை அகற்றி புதிய கட்டிடம் கட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் பேருந்து நிலையத்திலிருந்து ஐயப்பன் கோவில் செல்லும் வழியில் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறை ஒன்று அமைந்துள்ளது. இந்த கழிப்பறை நீண்ட காலமாக பராமரிப்பின்றி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் பூட்டிக்கிடக்கிறது. இதனால், தற்போது அப்பகுதி முழுவதும் செடி, கொடிகள் அடர்ந்து புதர்மண்டி காணப்படுகிறது. மேலும், அங்கே குப்பைகளும் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது. பொதுமக்களுக்கு எந்தவித பயன்பாடும் இன்றி வீணாகக் கிடக்கும் இந்த பழைய கழிப்பறையை உடனடியாக அகற்றிவிட்டு, அவ்விடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் பயனுள்ள வகையில் புதிய கட்டிடம் அல்லது பயனுள்ள கட்டிடத்தை கட்டித்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் நகராட்சி நிர்வாகத்திற்குச் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிங்கார வனச்சரகத்தில் வன உயிரின வார விழா

கூடலூர், அக் 7: வன உயிரின வார விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக முதுமலை புலிகள் காப்பகம், மசனகுடி சிங்காரா சாலையில், சிங்கார வனச்சரக களப்பணியாளர்கள் மற்றும் சுற்றுலா ஜீப் ஓட்டுநர்கள் இணைந்து சாலையோர வனப்பகுதியில் பாலித்தீன் மற்றும் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர்.

வாகனங்களில் செல்வோர் சாலையில் வீசும் பிளாஸ்டிக்பைகளால் வன உயிரினங்களுக்கு ஏற்படும் ஆபத்து குறித்து சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து ஊட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் ராமகிருஷ்ணன், ஜீப் ஓட்டுநர்களுக்கு நடத்திய கருத்தரங்கில் வனவிலங்குகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும், வன உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், வன உயிரினங்களை பாதுகாப்பதில் உள்ளூர் மக்களின் பொறுப்புகள் குறித்தும் விளக்கங்கள் அளித்தார்.

குந்தா அணை கரையோரங்களில்

ஆக்கிரமித்துள்ள செடி, கொடிகளை அகற்ற கோரிக்கை

மஞ்சூர், அக்.7: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ள குந்தாபாலத்தில் நீர் மின்நிலையம் அதையொட்டி குந்தா அணை உள்ளது. மின்நிலையத்தில் மின்சார உற்பத்திக்கு பின் வெளியேறும் நீர் அணையில் தேக்கி வைக்கப்படுகிறது. இது தவிர தொட்டஹள்ளா, பிகுளி போன்ற சிற்றாறுகளில் இருந்தும் குந்தா அணைக்கு நீர்வரத்து உள்ளது. குந்தா அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் சுரங்கபாதை வழியாக கெத்தை மற்றும் பரளி மின் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குந்தா அணை தூர்வாரி பல ஆண்டுகள் ஆனதால் அணையில் பெரும்பகுதி சேறு, சகதிகள் நிறைந்துள்ளது. இதுமட்டுமின்றி அணையின் முகப்பு பகுதி மற்றும் அணையின் இரு புறங்களிலும் பல வகையான செடி, கொடிகள் வளர்ந்து ஆக்ரமித்துள்ளது. மேலும், ஆகாயதாமரை செடிகளும் படர்ந்துள்ளது. இதனால், அணையின் பரப்பு சுருங்கிகாணப்படுவதுடன் எதிர்காலங்களில் போதிய அளவுதண்ணீரைசேமித்து வைக்கமுடியாதநிலை உள்ளதாககூறுகின்றனர். இதையடுத்து குந்தா அணையில் சேறு, சகதிகளை அகற்றி தூர்வாரவும் அணையின் முகப்பு பகுதி, கரையோரங்களில் வளர்ந்துள்ள செடி, கொடிகள் ஆகாய தாமரைகளை அகற்ற நடவடிக்கைஎடுக்கவேண்டும் என பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளார்கள்.

ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 09, சமுதாய மையம், பசந்த் லோக், வசந்த் விஹார், புதுடெல்லி-110057 தொலைபேசி: 011 49267000, கட்டணமில்லா எண்: 1800 212 8800, மின்னஞ்சல்: customer.care@herohfl.com இணையதளம்: www.herohousingfinance.com | CIN: U65192DL2016PLC30148, தொடர்பு முகவரி: 6 ஆவது தளம், 1547, கிளாசிக் டவர்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

(கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(1) உடன் பிற்சேர்க்கை IV இன்படி)

இவ்வாறிருக்க, கீழேக் கையொப்பமிட்டவர் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்க்குறிப்பிட்டவாறு ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர்கள் அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகையை மேற்கூறிய அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரருக்குக் குறிப்பிட்டு, மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறியச் சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்டச் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார்.
கடன்தாரருக்குக் குறிப்பிட்டு, மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக, இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் கீழேக் குறிப்பிட்டத் தொகைக்காக கீழ்க்குறிப்பிட்டத் தேதி முதல் அதற்கான வட்டி மேலும் அபராத வட்டி, செலவுகள், கட்டணங்கள் ஏனையவற்றுடன் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் வசூலுக்கு உட்பட்டது.
கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

கடன் கணக்கு எண்	கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்/ கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	சுவாதீனம் நாள் (ஆக்கப்பூர்வ/ நேரடி)
HHFCOIHOU24000045741 மற்றும் HHFCOILAP24000048075	பாண்டி, விஜயலட்சுமி P	22.11.2025 18.11.2025 தேதியன்று ரூ.88,52,232/–	01.10.2026 (நேரடி)

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்துகள் விவரம்: கதவு எண்.63 B, பழைய S.No.18/3, புதிய துணைப் பிரிவிற்குப் பிறகு புதிய S.No.719/6, குனியமுத்தூர் கிராமம், பேரூர் வட்டம், கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் ராஜா தெரு இணை 1 சார் பதிவு அலுவலகத்தில் அமைந்துள்ள 1753 ச.அடி பரப்பளவு உள்ள சொத்து. எல்லைகள்: கிழக்கு: பள்ளம், மேற்கு: தெற்கு வடக்கு சாலை, வடக்கு: கிழக்கு மேற்கு சாலை, தெற்கு: ஜெயலட்சுமி ஆர்.சி.சி. வீடு.

நாள்:- 07.10.2026
இடம்:- கோயம்புத்தூர்
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்காக

GRIHUM க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: எண்.1510, 2ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.10.2026 தேதியில் மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண் HL00118100000005020326 பாபு திருமூர்த்தி, (கடன்தாரர்), லலிதா பாபு (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08.08.2025 மொத்த நிலுவைத் தொகை: 08.08.2025 தேதியன்று ரூ.20,68,787/– (ரூபாய் இருபது லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எழுநூற்று எண்பத்தேழு மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு வட்டி 13.6% உட்பட.	நேரடி	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை துணை பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை கிராமம், நத்தம் எண்.807aiaiaiai, வார்டு எண்.2, மாகாளியம்மன் கோயில் தெரு, 539 ½ ச.அடி அல்லது 50.13 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்தின் எல்லைகள்: கிழக்கு மற்றும் வடக்கில்: இஸ்மாயில், பதுமிஷாவுக்குச் சொந்தமான மீதமுள்ள சொத்து, மேற்கில்: அஜ்வரூல்லாஹ் மற்றும் பிறரின் சொத்துகள், தெற்கில்: கிழக்கு மேற்கு மாகாளியம்மன் கோயில் தெரு.	Rs. 1400000.00/- (ரூபாய் பதினான்கு லட்சம் மட்டும்)	Rs. 140000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)	23-10-2026 Before 5 PM	10,000/-	19-10-2026 (11AM – 4PM)	26-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, பான்ஞ்சீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் குறிப்பிட்ட 23.10.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018 என்ற முகவரியில் கைபேசி எண். +91 8281138143, +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 07.10.2026
இடம்: தமிழ்நாடு
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்